**இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவிம்  - 2020**

-----------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் (''குழு'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று, ஒதுக்கங்கள் மற்றும் நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தேசிய ஒலிம்பிக் குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக குழுவின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி தேசிய ஒலிம்பிக் குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக தேசிய ஒலிம்பிக் குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது குழுவின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது தேசிய ஒலிம்பிக் குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க குழு செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க குழுவினால் பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

---

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 1993 இன் 29 ஆம் திகதிய 773/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | தேசிய ஒலிம்பிக் குழுவினால் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக கிடைக்கும் மானியங்கள் தொடர்பான அறிக்கையொன்று நான்கு மாதங்களுக்கு ஒருமுறை இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் , 2020 ஆம் ஆண்டில் தேசிய ரீதியாக பெறப்பட்ட நிதி ரூபா 25,219,095 மற்றும் | 1973 இல் விளையாட்டுச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னரே இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு ஆனது ஐஓசீ இனால் அங்கீகரிக்கப்பட்ட அரசியலமைப்பின் மூலம் (1937 இல் உருவாக்கப்பட்டது) நிர்வகிக்கப்படுவதுடன் வழக்கமான | விளையாட்டு சட்டத்தின் படி பெறப்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச மானியங்கள் தொடர்பான காலாண்டு அறிக்கைகளை தேசிய ஒலிம்பிக் குழு இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்க |

| | | |
|---|---|---|
| சர்வதேச ரீதியாகப் பெறப்பட்ட நிதி ரூபா 119,358,672 தொடர்பாகவும் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு குழு தவறியிருந்தது. | மாதாந்த கூட்டங்கள் தொடர்பாக அமைச்சிற்கு தெரியப்படுவதுடன் இதுவே நடைமுறையாக இருந்து வருகின்றது.<br><br>அனைத்து செயற்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளும் முறையான காலப் பகுதிக்குள் சர்வதேச நிறுவனங்களுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்களுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. சர்வதேச ரீதியாக அல்லது உள்நாட்டில் எந்த நிதி பெறப்பட்டாலும் அனைத்து மட்டங்களிலுமான விளையாட்டு மற்றும் விளையாட்டு வீரர்களையும் மேம்படுத்துவதற்கான அனைத்து திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளையும் முறையாகவும் பயனுள்ளதாகவும் திட்டமிடுகின்றோம். | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 19,329,390 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 19,356,744 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 38,686,134 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டுச் செலவினம் ரூபா 50,032,411 ஆல் குறைவடைந்தமையே இம்முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் தேசிய ஒலிம்பிக் குழுவின் கீழ் முப்பத்து நான்கு தேசிய சம்மேளனங்கள் பதிவு செய்திருந்தன. 34 சம்மேளனங்களில் 32 சம்மேளனங்களுக்காக மீளாய்வாண்டில் வருடாந்த மானியமாக ரூபா 6,400,000 ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் தொடக்கத்தில் முன்னைய ஆண்டுகளின் செலுத்தப்படாத ஒதுக்கங்கள் ரூபா 8,630,074 ஆகும். இருந்த போதிலும் பதிவு செய்யப்பட்ட சம்மேளனங்களுக்காக மானியங்களை விடுவிப்பதற்கான உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 5,227,217 ஆன தொகை குழுவினால் செலுத்தப்படாது மீளாய்வாண்டின் இறுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கட்டுப்பாட்டு அமைப்பொன்றாக இந்நிலைமையைக் கண்காணிப்பதற்கு குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை என்னவென்றால், தேசிய சம்மேளனங்கள் சில தேவைப்பாடுகளுக்கு இணங்க வேண்டியதுடன் மற்றும் அவர்களின் வருடாந்த மானியம் மற்றும் வருடாந்த செயற்திட்டங்களுடன் தொடர்பான செலவுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய தேசிய சம்மேளனங்கள் வரிசையில் வராமல் மற்றும் அவர்களின் மானியம் அல்லது ஏதேனும் செயற்திட்டச் செலவுகளுக்கும் விண்ணப்பிக்காவிட்டால் தேசிய ஒலிம்பிக் குழுவினால் நிதியை விடுவிக்க முடியாததுடன் அல்லது தேசிய சம்மேளனத்தின் இத்தகைய செயல்களுக்கு பொறுப்பாக இருக்க முடியாது. எனவே தேசிய ஒலிம்பிக் குழு எவ்வித நிதியையும் வழங்கவில்லை என்ற கருத்துரையுடன் நாம் உடன்பட முடியாது. அதற்குப் பதிலாக தேசிய சம்மேளனங்கள் அவர்களின் மானியங்களை சேகரிப்பதில் ஆர்வம் காட்டவில்லை என்பதே சரியானது. | உரிய ஆவணங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் தேசிய ஒலிம்பிக் குழு அங்கத்தவர் சம்மேளனங் களுக்கு மானியத்தை விடுவிக்க வேண்டியதுடன் கட்டுப்பாட்டு அமைப் பொன்றாக இந்நிலைமை யைக் கண்காணிப் பதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ii) | 2017 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்ற ரூபா 517,784 ஆன செலுத்த வேண்டிய தொகையை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட எங்கள் புத்தகங்களில் காணப்பட்ட இத்தொகைகளை செலுத்த வேண்டியவையாக / பொறுப்புக்களாக நாம் வைத்திருந்தோம். இருந்த போதிலும் இது தொடர்பாக விளையாட்டுத் | செலுத்த வேண்டிய வைகளைத் தீர்ப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திணைக்களத்திடம் எவ்வித பதிவுகளும் இல்லாமையால் அடுத்த வருடத்தில் நாம் அதனைப் புத்தகங்களிலிருந்து நீக்கி விடுவோம். இந்தப் பொறுப்பை கையாள்வதில் எவ்வித தவறான வழியையும் நாம் காணவில்லை. | |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் அரச பெறுகை வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகுவதற்காக ஒலிம்பிக் குழுவினால் தனிப்பட்ட பெறுகை வழிகாட்டியொன்று தயாரிக்கப்பட்டு நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் மேற்படி பெறுகை வழிகாட்டிக்கு இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், பெறுகை திட்டமிடல், மனுக்கோரல் காலம், மனுக்களுக்கான மதிப்பீட்டு அளவுகோல்கள், பெறுகைக்கான முற்பணக் கொடுப்பனவுகள், செயலாற்றல் பிணை, ஒப்பந்தங்களுக்கான பிடி காசு, பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக் கொடுப்பனவுகள், மனுக்களுக்கான பிணை, நட்டக்கழிவுகள் மற்றும் ஒப்பந்தங்களை வழங்குதல் போன்ற அரச பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள சில முக்கிய கூறுகள் தேசிய ஒலிம்பிக் குழுவினால் தயாரிக்கப்பட்டிருந்த தனிப்பட்ட பெறுகை வழிகாட்டிக் கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2006 இன் அரச வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை வழிகாட்டிக் கோவை தொகுக்கப்பட்டு நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. வழிகாட்டிக் கோவையை நாம் எவ்விதத்திலும் மீறவில்லை என்பதால் வேறு எந்த அங்கீகாரத்தையும் பெற வேண்டிய அவசியமில்லை. | அனைத்து முக்கியமான கூறுகளையும் உள்ளடக்கியதாக பெறுகை வழிகாட்டிக் கோவை தயாரிக்கப்பட்டு இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குழுவின் பதவியணிக்காக முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று | நாம் அதிகளவில் இலாபம் உழைக்கும் நிறுவனமல்ல. எனவே கிரயத்தை குறைந்த | செயற்திறனான மனித வள முறைமையை |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மட்டத்தில் பேணுவதற்காக குறைந்தளவு பதவியணியினருடன் முகாமை செய்யப்படுகின்றது. ஏதேனும் புதிய செயற்பாடுகள் அல்லது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், தேவைப்படுமிடத்து நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்துடன் முறையான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படுகின்றது. இது தற்போது தேசிய ஒலிம்பிக் குழுவின் தேவையொன்றாக நாம் காணவில்லை. நாம் முடிந்தளவு எமது செயற்திட்டங்களில் தன்னார்வலர்களையும் பயன்படுத்துகின்றோம். | பேணிச் செல்வதற்காக பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கபட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குழுவினால் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நாம் ஆண்டு தோறும் வெவ்வேறு விளையாட்டுக்கள் மற்றும் செயற்பாடுகளில் கவனம் செலுத்துவதால் ஒரு தந்திரோபாயத் திட்டத்தினை உருவாக்குதல் இந்நிறுவனத்திற்குச் சாத்தியமாகாது. இந்த நிறுவனம் செயற்படுதலானது பிரதானமாக ஆண்டுதோறும் வேறுபடுகின்ற நானாவித விளையாட்டுக்களுக்காகப் பெறப்படுகின்ற மானியங்கள் / நன்கொடைகள் மூலமாகும். யாதார்த்தமற்ற ஒரு தந்திரோபாயத் திட்டத்தை உருவாக்குவது நிறுவனத்தை செயலற்றதாக மாற்றிவிடும். | குழுவின் எதிர்கால வழிகாட்டல்களை உள்ளடக்கியதாக கூட்டிணைந்த திட்டத்தினை தயாரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |